செய்தி வெளியீடு எண்: 415 நாள்: 11.07.2019

<u>செய்தி வெளியீடு</u>

இன்று 11.07.2019 பிற்பகல் 04.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம், எழிலகம் கூட்டரங்கில் மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்களுடன் மாநில அளவிலான கலந்தாய்வுக்கூட்டம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்ட, உலகம் போற்றும் உன்னத திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டமும், கூடுதல் பயன்களுடன் உணவு பாதுகாப்பு சட்டமும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் பெருமிதத்துடன் கூறினார். இத்திட்டத்தின் முழு பயன்களும் உரியவர்களை சென்றடைய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது நம் அனைவரின் தலையாய கடமையாகும் என்றும் தெரிவித்தார்.

01.04.2017 முதல் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு, இன்று வரை, 1 கோடியே 99 இலட்சத்து 97 ஆயிரத்து 924 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், புதிய மின்னணு குடும்ப அட்டை கோரி பதிவேற்றம் செய்யப்பட்ட மனுக்கள், பரிசீலனை செய்யப்பட்டு 81 ஆயிரத்து 903 புதிய மின்னணு குடும்ப அட்டைகளை அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது. பொது விநியோகத் திட்ட புகார்கள் குறித்து இலவச அழைப்பு எண். (Toll Free No.) 1967க்கும், குடும்ப அட்டைதாரர்கள் பொருள்கள் பெற்றதாக தவறான குறுஞ்செய்தி வரப்பெற்றால், அதனை அப்படியே PDS 107 என்ற செயலிக்கு அனுப்பியும், கைபேசி 9980904040 என்ற எண்ணுக்கு புகார் செய்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமையன்று நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், இன்று வரை, 7 இலட்சத்து 88 ஆயிரத்து 667 மனுக்கள் பெறப்பட்டு, 7 இலட்சத்து 65 ஆயிரத்து 858 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு

காணப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மட்டும்தான் இவ்வகை முகாம்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில், கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் ஓட்டுநர்கள் மட்டுமின்றி கடத்தலுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் துணை போகும் நபர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். கடந்த 8 ஆண்டுகளில் உணவு பொருள் கடத்தல் தடுப்பு காவல் துறையினரால் எடுக்கப்பட்டு வரும் கடுமையான தொடர் நடவடிக்கைகளால் இதுவரை 1,099 நபர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் (BM ACT) கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி, கோதுமை விலையில்லாமலும் பருப்பு, பாமாயில், சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகியவை மானிய விலையிலும் வழங்கப்பட்டு வருவதால் விலைவாசி கட்டுக்குள் வைக்கப்பட்டு பொதுமக்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது. வெளிச்சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலையை தொடர்ந்து கண்காணித்து அவ்வப்போது அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டில் 3 மாதங்களுக்கு தேவையான பொது விநியோகத் திட்ட அரிசியும், ஒவ்வொரு மாத தேவைக்கான சர்க்கரை, கோதுமை, பருப்பு மற்றும் பாமாயில் கையிருப்பில் உள்ளது என மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திருமதி எம். சுதாதேவி, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி. எஸ். மதுமதி, இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப் புலனாய்வுத் துறை இயக்குநர் திரு. பிரதீப் வி. பிலிப், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**